

ஈரோட்டில் மார்ச் 31 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணா திராவிட மக்கள் முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர், மூத்த வழக்கறிஞர் சே.பசும்பொன் பாண்டியன் தொகுத்துள்ள ‘திரமிள சங்கம் முதல் திராவிட மாடல் வரை’ என்ற புத்தகத்தை வெளியிட்டார். இதனை வீட்டு வசதித் துறை அமைச்சர் முத்துசாமி பெற்றுக் கொண்டார்.



திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதியில் தி.மு.க. கூட்டணி சார்பாக போட்டியிடும் சி.பி.எம்.கட்சி வேட்பாளர் தோழர் ஆர்.சச்சிதானந்தத்தை ஆதரித்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரும் தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளருமான ஐ.பெரியசாமி தீவிரமாக பிரச்சாரம் செய்து அரிவாள்சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். அருகில் வேட்பாளர் ஆர்.சச்சிதானந்தம் உட்பட பலர் உள்ளனர்.

### பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தலைமை! அமைச்சர் எ.வ.வேலு முன்னிலை!

# வேலூரில் இன்று கழகத் தலைவர் முதல்வர் - மு.க.ஸ்டாலின் உரையாற்றுகிறார்!

## அமைச்சர் ஆர்.காந்தி – ஏ.பி.நந்தகுமார் – க.தேவராஜ் – எஸ்.சந்திரன் அறிக்கை!

வேலூர், ஏப். 2 -

அரக்கோணம் மற்றும் வேலூர் நாடாளுமன்றத் தொகுதிகளின் மதச்சார்பற்ற முற்போக்கு ‘இந்தியா’ கூட்டணி கழக வேட்பாளர்கள் ஜெகத்ரட்சகன் மற்றும் கதிர்ஆனந்த் ஆகியோரை ஆதரித்து வேலூரில் மாபெரும் தேர்தல் பரப்புரை பொதுக்கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இதில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரை யாற்றுகிறார்.

இது குறித்து மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் ஆர்.காந்தி, ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., க.தேவராஜி எம்.எல்.ஏ., எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. ஆகியோர்கள் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு: 19.04.2024 அன்று தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு அரக்கோணம் மற்றும் வேலூர் நாடாளுமன்ற தொகுதி கழக வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரிக்கும் மாபெரும் பொதுக்கூட்டம் வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் நடைபெறுகிறது. நாட்டை காவிமயம் ஆக்கி மதஅரசியலால் நாட்டை பிளவுபடுத்தி மத ரீதியாக மக்கள் இடையே வேற்றுமையை தூண்டிவிட்டு நாட்டை 50 ஆண்டு காலத்திற்கு பின்னோக்கி சென்றிட பாசிச பாஜக தனது பிற்போக்கு அரசியலை கையாண்டு உலகநாடுகளிடையே தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலை மாறி பாசிசம் வீழ்ந்து ஜனநாயகம் மலர்ந்திட தமிழ்நாடு முதல்வர், கழகத்தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் தேசிய அளவில் மதச்சார்பற்ற முற்போக்கு இண்டியா வெற்றி கூட்டணி அமைத்து எதிர்கட்சிகளை ஒருங்கிணைத்து நடைபெற உள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் பாசிச பாஜகவை நாட்டை விட்டு விரட்டிட ஒரு நல் வாய்ப்பாக தமிழ்நாட்டில் நாற்பதும் நமதே நாடும் நமதே என்ற ஒற்றை இலக்குடன் தேர்தல் நடக்க உள்ளது.

இந்நிலையில் அரக்கோணம் மற்றும் வேலூர் நாடாளுமன்ற மதச்சார்பற்ற முற்போக்கு இண்டியா கூட்டணியின் திராவிட முன்னேற்ற கழக வெற்றி வேட்பாளர்கள் ஜெகத்ரட்சகன் மற்றும் D.M.கதிர் ஆனந்த் ஆகியோர்களை ஆதரித்து இன்று (02.04.2024 - செவ்வாய்க்கிழமை) மாலை 06.00 மணி அளவில் வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் கழக பொதுச்செயலாளர், நீர்வளம், கனிமவளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் தலைமையிலும், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் ஏ.வ.வேலு மற்றும் கைத்தறி, துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி, திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ, திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர்கள் முன்னிலையிலும், வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ வரவேற்புரையிலும், தேர்தல் கூட்டணி மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகளின் சிறப்புரையிலும், வேலூர் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ நன்றியுரையிலும், முதல்வர், கழகத்தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பரப்புரை நிகழ்த்துகிறார்.

இக்கூட்டத்தில் அரக்கோணம் மற்றும் வேலூர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், இந்தியா கூட்டணி தோழமை கட்சிகளான காங்கிரஸ், CPI, CPM, மதிமுக, விசிக, முஸ்லீம் லீக், மக்கள் நீதி மய்யம், மனித நேய மக்கள் கட்சி, மனித நேய ஜனநாயக கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி, சமத்துவ மக்கள் கட்சி, திராவிடர் கழகம், MGR கழகம், திராவிடர் நட்பு கழகம், தமிழக வாழ்வுரிமை கட்சி, ஆதிதமிழர் பேரவை, தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி, கொ.ம.தே.க, திராவிட முஸ்லீம் முன்னேற்ற கழகம் உள்ளிட்ட நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைமைக்கழக சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள், வட்ட, வார்டு, ஊராட்சி உட்கிளை நிர்வாகிகள், மாவட்ட ஊராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், கழக முன்னாள், இந்நாள் முன்னோடிகள், ஆகியோர்கள் கலந்து கொண்டு கழக வெற்றி வேட்பாளர்களை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற செய்கிற கழகத்தலைவர் அவர்களின் கரத்தினை வலுபடுத்திட கூடிடுவோம். வென்று காட்டுவோம்.

இவ்வாறு மாவட்ட செயலாளர்கள் அமைச்சர் ஆர்.காந்தி, ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, க.தேவராஜி எம்.எல்.ஏ, எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர்கள் கூட்டாக அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

### தேர்தல் பரப்புரை நிகழ்ச்சியின்போது

# இராதாபுரம் தொகுதியில் மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் ஆர்.ராதாகிருஷ்ணன் முன்னிலையில்!

நெல்லை, ஏப். 2 -

நெல்லை மாவட்டம் இராதாபுரம் தொகுதி இடிந்தகரை சுனாமி காலனியில் நடந்த தேர்தல் பரப்புரை நிகழ்ச்சியில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் 250 பேர்கள் அக்கட்சிகளில் இருந்து விலகி மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

நெல்லை நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ்க்கு ஆதரவாக கை சின்னத்தில் வாக்கு கேட்டு மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் நெல்லை மாவட்டம் கடற்கரை கிராமங்களான கூத்தங்குழி, தோமையார்புரம், இடிந்த கரை, உவரி உள்ளிட்ட மீனவ கிராமங்களில் வீடு வீடாகச் சென்று கை சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார்.

அப்போது இடிந்தகரை சுனாமி காலனியில் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர் ராதாகிருஷ்ணன் முன்னிலையில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் 250 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி தாமாக முன்வந்து கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

முன்னதாக இடிந்தகரையில் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணனுக்கு மீனவ கிராம மக்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நிகழ்வில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் உமரி சங்கர், நெல்லை கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் கிரகாம்பெல், இராதாபுரம் ஒன்றிய செயலாளர் வி. எஸ்.ஆர்.ஜெகதீஸ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், தூத்துக்குடி இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் ராமஜெயம், முன்னாள் அமைப்பாளர் ஜெகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருநெல்வேலி தொகுதி காங். வேட்பாளர் ராபர்ட் புரூஸை ஆதரித்து

# இராதாபுரம் தொகுதியில் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வாக்குச் சேகரிப்பு!

## கிராமம் கிராமமாகச் சென்று பிரச்சாரம்!

நெல்லை, ஏப். 2 -

திருநெல்வேலி மக்களவை தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸை ஆதரித்து மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் நெல்லை மாவட்டம் இராதாபுரம் தொகுதியில் உள்ள கடற்கரை கிராமங்களில் தீவிர வாக்கு சேகரிப்புப் பணியில் ஈடுபட்டார்.

தமிழ்நாட்டில் வருகிற ஏப்ரல் 19ஆம் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுகிறது.திருநெல்வேலி மக்களவை தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் போட்டியிடுகிறார்.அவர் நெல்லை வண்ணாரப்பேட்டையில் கைச்சின்னத்திற்கு வாக்கு கேட்டு தனது முதல் பிரச்சாரத்தை தொடங்கினார்.

இந்நிலையில் 30 ம் தேதி அன்று மீன் வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் ஆதரித்து நெல்லை மாவட்டம் கடற்கரை கிரா மங்களான பெரியதாழை, ஜார்ஜ்யா நகர், குட்டம், கூடுதாழை, கரைச்சுத்து உவரி, உவரி, கூத்தன்குழி, பாத்திமா நகர், தோமையார்புரம், இடிந்தகரை ஆகிய கடற்கரை கிராமங்களில் வாக்கு சேகரித்தார்.

நெல்லை நாராளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ராபர்ட் புரூஸ்க்கு ஆதரவாக மீனவர் நலன், மீன்வளம் மற்றும் கால்நடைத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் நெல்லை மாவட்ட கடற்கரை கிராமங்களான கூத்தங்குழி, தோமையார்புரம் இடிந்தகரை, உவரி உள்ளிட்ட மீனவ கிராமங்களில் வீடு வீடாகச் சென்று கை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

பின்னர் கூத்தங்குழியில் அமைச்சர் அனிதா ராதா கிருஷ்ணன் பேசியதாவது. மகளிர்க்கு மாதந்தோறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக1000 ம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. விடுபட்ட மகளிருக்கும் உரி மைத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.அவர்களுக்கும் விரைவில் வழங்கப்படும். பெண்கள் பேருந்தில் கட்டணமில்லாமல் பயணம் செய்ய முதலமைச்சர் அவர்கள் திட்டம் தந்துள்ளார். இப்படி பெண்களின் முன்னேற்றத்திற்கான ஏராளமான திட்டங்களை கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் தந்து கொண்டு இருக்கிறார்.

எங்கள் ஊரில் மோடியை பற்றி பேசியவுடன் என் மீது வழக்கு போட்டார்கள்.ஆனால் பாராளுமன்றத்தில் அன்னை சோனியாவை பற்றியும் அவருடைய வாழ்க்கையை பற்றியும் கூறி சோனியாவை கேவலப்படுத்த முயற்சி செய்தவர்கள் மீது எத்தனை வழக்குகள் போடலாம்? அது மட்டும் அல்ல இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக அனைவரும் பாடுபட்டார்கள்.

ஆனால் இவர்களுக்கும் சுதந்திரத்திற்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது.சர்தார்வல்லபாய்படேல் பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரை பற்றி பேச இவர்களுக்கு உரிமை இல்லை.

சிறுபான்மையினரை காக்க போகிறேன் என்று அ.தி.மு.க. கூறிவிட்டு தற்போது மோடிக்கு எடப்பாடி ஆதரவுகொடுத்து வருகிறார்.

மக்களை ஏமாற்றுவதற்கும் சிறுபான்மை ஓட்டை பிரிப்பதற்காகவும் எடப்பாடியும், மோடியும் ஒன்று சேர்ந்துள்ளார்கள்.

இந்தியா கூட்டணி நிச்சயமாக வெற்றி பெற்று ஒன்றியத்தில் ஆட்சி அமைக்கும்.மணிப்பூரில் பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு 300க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் இடிப்பட்டுள்ளது. அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தேவாலயங்களை காப்பாற்ற முடியாது.எடப்பாடிக்கு ஓட்டு போட்டால் அதைவிட கேவலம் எதுவும் இல்லை. ஆகவே நீங்கள் அனைவரும் மறக்காமல் கை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும். அதோடு மட்டுமல்ல அவரை அதிகவாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர் ராதாகிருஷ்ணன் பேசினார்.

முன்னதாக பிரச்சார பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் சுப. உதயகுமார் பேசுகையில்.இந்த நாட்டை மாபெரும் ஒரு அழிவு சக்தி கபளிகரம் செய்து வருகிறது. நமது நாடு இன்று சாதி மத அடிப்படையில் பிளவு படுத்தப்பட்டு நமது வருங்காலம் இருட்டடிப்பு செய்யப்படுகிறது. மிக மோசமான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். இந்த நேரத்தில் மதவாத சக்திகளை முற்றிலுமாக தோற்கடிக்க வேண்டும் மதசார்பற்ற ஆட்சி அமைய வேண்டும் எனவே சிந்தித்து நீங்கள் வாக்களிக் வேண்டும் அணுத்துவமும் பாசிசமும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் பாசிசத்தை வீழ்த்த இந்த நாட்டை காப்பாற்ற கை சின்னத்திற்கு வாக்களியுங்கள் என கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் கிரகம்பெல், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, ஒன்றிய செயலாளர்கள் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ், ஜோசப்பெல்சி, ஆரோக்கிய எட்வின், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ ஐயப்பன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் கனகராஜ், சாலமோன் டேவிட் மற்றும் கழகத்தினர், மீனவ மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முன்னதாக அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அனைவரிடமும் கோரிக்கை மனுவை பெற்றுக் கொண்டார்.



‘இந்தியா’ கூட்டணியின் தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி பெரிய மார்க்கெட்டில் உள்ள வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோரிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளைச் சேகரித்தார். தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பெ.கீதா ஜீவன், தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.




இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் ‘இந்தியா’ கூட்டணியின் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் வேட்பாளர் நவாஸ் கனியை ஆதரித்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில் வாரியத் துறை அமைச்சர் ஆர் எஸ் ராஜ கண்ணப்பன், மாவட்ட கழகச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., திருவாடானை சட்டமன்ற உறுப்பினர் கருமாணிக்கம் உட்பட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு அச்சுந்தன்வயல் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வாக்குச் சேகரித்தனர்.



தேனி நாடாளுமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன் தேனி தெற்கு ஒன்றிய பகுதிகளில்உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். உடன் தேனி தெற்கு ஒன்றியச் செயலாளர் ரத்தினசபாபதி மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.